4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படியான விதிகள், ஆணைகள்.

*70. தமிழ்நாடு மின்வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கை, 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. (ஆங்கிலம்). [1948 ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச்சட்டம் 54/1948) 61 (3) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

*71. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1980-81 ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1948 ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச்சட்டம் 54/1948) 75 (1) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

72. நத்தம் வட்டத்திலுள்ள பரலி கிராமத்தை கிராமதான கிராமமாக அறிவித்தது தொடர்பாக, ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 6—6—1983 ஆம் நாளிட்ட 1065 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான-யக்ஞ சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) ஆவது பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

73. கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான சில மோட்டார் வண்டிகளுக்கு அபராதத்தொகையினைத் தள்ளுபடி செய்தது தொடர்பாக, உள்துறையின் (போக்குவரத்து I) 9—11—1983 ஆம் நாளிட்ட 2346 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

74. தமிழ்நாடு நீர்வழங்கல்-வடிகால் வாரியத்தின் MSL 5005 எண் கொண்ட பணியாளர் மோட்டார் வண்டிக்கு அபராதத் தொகையைத் தள்ளுபடி செய்தது தொடர்பாக, உள்துறையின் (போக்குவரத்து-I) 9—11—1983 நாளிட்ட 2348 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின்கீழ் அவைமுன் வைக்கப்பட்டது].

75. கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகளுக்குச் சலுகை வீதத்தில் வரி விதித்தது தொடர்பாக, உள்துறையின் (போக்குவரத்து I) 14—11—1983 ஆம் நாளிட்ட 2391 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்பட்டது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

இல்லை.

---

* 15—2—1984 அன்று மேலவையில் வைக்கப்பட்டது.